
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1137

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

151

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த `துறவி' கோ. இளங்கோவன் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# `துறவி' கோ.இளங்கோவன்
# தஞ்சை அரசியல் ஆசிரியர்!

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் கழகத்தினர் அறிந்த 'துறவி'. பள்ளியில் கணித ஆசிரியர்; இலக்கிய மேடைகளில் அருவியாகப் பொழியும் தமிழாற்றல் கொண்ட பேச்சாளர்; சமரசமற்ற கழகப் போராளி. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரோடு அரசியல் பயணம் செய்தாலும் தன்னை கழகத்தின் கடைநிலைத் தொண்டர் என்றே அறிவித்துக் கொண்ட உடன்பிறப்பு, தஞ்சாவூர் மிசா. கோ.இளங்கோவன். பேராசிரியர் அவர்களின் அணுக்க நண்பர் எனப் பெயர் பெற்றவர்.

தஞ்சை பூதலூர் அருகே உள்ள இளங்காடு என்கிற ஊரில் பிறந்தவர். அன்றைய காலத்தில் செல்வாக்கு கொண்ட குடும்பத்தில் பிறந்தவர். அந்த ஊர், இலக்கியச் செழுமையும் திராவிடச் சிந்தனையும் பழுத்த ஊராகத் திகழ்ந்தது. அதையொட்டி, இளங்கோவன் அவர்களின் பயணமும் திராவிடர் கழகத்தில் தொடங்கி, கழகத்தின் தொடக்கக் காலங்களிலேயே கழகத்தின் செயல்வீரராக இணைந்தவர். ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் மன்னை நாராயணசாமி ஆகியோருடன் இணைந்து கள அரசியல் செய்தவர்.


தஞ்சையில் வீரராகவா பள்ளியில் ஆசிரியர், மன்னார்குடியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டே கழகப் பணிகளில் சமரசமற்று இயங்கியவர். அவரிடம் படித்த பலரும் சமூக அரசியல் அறிந்தவர்களாக, அரசியல்வாதிகளாக மாறியதுதான் அவரது பணிக்குச் சான்று. குறிப்பாக, தஞ்சைக் கழகத்தின் மூத்த நிர்வாகிகள் பலரும் இளங்கோவன் அவர்களின் மாணவர்களாக இருந்து, அவரிடம் அரசியல் கற்றுக்கொண்டவர்கள். இவரால் வளர்க்கப்பட்டவர்கள்தான் இன்று மாவட்டப் பொறுப்பிலும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாகவும் இருக்கின்றனர் என்கின்றனர் தஞ்சைக் கழகத்தினர்.

அவர் ஆசிரியப் பணியாற்றிய அதே காலகட்டத்தில், கழகத்தின் தலைமைக் கழகப் பேச்சாளராக, தமிழ்நாடு முழுவதும் கழகக் கொள்கை பரப்ப சூட்டிக்கொண்ட புனைபெயர்தான் 'துறவி'.

### அண்ணாவின் பாராட்டு

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத் தலைமை செயற்குழு உறுப்பினராகவும் இருந்த துறவி இளங்கோவன் அவர்களின் உரைவீச்சு குறித்து, அன்பிலார் ஏற்பாடு செய்த ஒரு கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா பேசுகையில், 'துறவி இளங்கோவன் போன்றோர், கழகக் கூட்டங்களில் மட்டுமல்ல; பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் மத்தியில் சென்று உரையாற்ற வேண்டும். அவர் கணித ஆசிரியர்தான்; ஆனால் பெரும்புலவர். கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பதைப்போல, இளங்காட்டில் இருப்பவர்கள் எல்லோரும் புலவர்களாகவே இருப்பர். இலக்கிய நயம் மிகுந்த, உலக வரலாற்று அரசியலோடு இளங்கோவன் பட்டிதொட்டியெல்லாம் பேச வேண்டும்' எனக் குறிப்பிட்டு, 'நான் மிகுந்து மெச்சுகிறேன்' எனக் கூறியுள்ளார்.

தஞ்சை நகரத்தில் மட்டுமல்ல திருவையாறு, பூதலூர், வல்லம் என சுற்றுவட்டாரம் எங்கும் சைக்கிளிலேயே பயணித்து, கிளைக் கட்டமைப்பினை வலிமையாக்கியவர்களில் ஒருவர் இளங்கோவன். தஞ்சை வடக்கு மாவட்டத்தில் அவர் செல்லாத கிராமங்களே இல்லை எனலாம். 1971-ஆம் ஆண்டு வரை கழக மேடைகளில் முழங்கிக்கொண்டிருந்தவரை, சட்டமன்றப் பணிகளுக்குக் கொண்டுவந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். திருவையாறு தொகுதியில் போட்டியிட்டு 50 சதவிகித வாக்குகளுடன் வெற்றி பெற்றார் இளங்கோவன். அதன்பின்னர், 1977-1980 சட்டமன்றத்திலும் திருவையாறு தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



### மிசாவில் காட்டிய உறுதி

ஆசிரியர் பணியில் இருந்த நாட்களில், கழகத்தின் போராட்டங்களின்போதும் களத்தில் இருந்தவர். விலைவாசி உயர்வு போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றவர். மிசா காலத்தில் ஓராண்டுக்காலம் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர். "கழகத்துக்காகச் சிறைப்பட்டிருக்கிறேன், அதனால் கலங்கக்கூடாது" என்று குடும்பத்தினரை உறுதியோடு இருக்கச் செய்து, சிறை சென்றவர். குறிப்பாக, சிறையில் இருந்து விடுதலையாகும் வரை, குடும்பத்தினர் வந்து தன்னை சந்திப்பதையும் அவர் விரும்பவில்லை. அந்த அளவுக்குக் கொள்கை உறுதி கொண்டவராக இருந்தவர். அதேபோல, அவரது குடும்பத்தினரும் கழகப் பற்று கொண்டவர்களாக இருந்தனர். மிசா கைதிகளின் குடும்பத்திற்குக் கழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட உதவித்தொகையை மறுத்து, கழகத்துக்கு நாங்கள்தான் செய்ய வேண்டும் என விசுவாசத்தைக் காட்டியவர்கள் என 'நெஞ்சுக்கு நீதி'யில் குறிப்பிடுகிறார் கலைஞர்.

> "கழகத்துக்காகச் சிறைப்பட்டிருக்கிறேன், அதனால் கலங்கக்கூடாது" என்று குடும்பத்தினரை உறுதியோடு இருக்கச்செய்து, சிறை சென்றவர்.

தஞ்சாவூர், திருவையாறு, பூதலூர், கல்லணை வரை கழகத்தினர் தவிர மாற்றுக்கட்சியினரும் மதித்த கொள்கை மறவராகத் திகழ்ந்தவர். சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் மட்டுமல்ல; அதன் பின்னரும் தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் பாரபட்சமின்றி அனைத்து சமுதாய மக்களுக்கும் ஆற்றுவதில் வல்லமை கொண்டவர் என நம்பிக்கை பெற்றிருந்தார். தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, நிக்கல்சன் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் தலைவராக இருந்து, வங்கிச் சேவைகளை மக்களுக்குத் திறன்படக் கொண்டுசேர்த்தவர்.

### அவைத் தலைவராக மணவிழாக்கள்

தஞ்சாவூர் வடக்கு மாவட்டக் கழக அவைத் தலைவராக, கடந்த 50 ஆண்டுகளில் தஞ்சை வட்டாரத்தில் அவர் தாலி எடுத்துக் கொடுத்து நடத்திவைத்த மணவிழாக்கள் ஏராளம் என்கின்றனர். அந்த அளவுக்கு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவராக இருந்தார். குறிப்பாக, கழகத்தினர் பலரும் தங்களை இளங்கோவன் அவர்களின் உறவினர் என்றே அறிமுகமாகிக்கொள்வார்கள். அவர் நிறுவிய 'பாவேந்தர் பேரவை' அமைப்பினை அவரால் வளர்க்கப்பட்டவர்கள் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கின்றனர். துறவி இளங்கோவன் அவர்களின் சகோதரர்தான் வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

1993-ஆம் ஆண்டுக்காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் இருந்து கழகத்தில் பலர் விலகியபோதும் கலைஞரே தலைவர் என உறுதியாக இருந்தவர். "கலைஞர் ஆயிரம் பேச்சாளர்களை உருவாக்குவார் என என்னை வழிநடத்தியவர்" என துறவி இளங்கோவன் அவர்களுடனான நினைவினைப் பகிர்கிறார், தலைமைக் கழகப் பேச்சாளர் வரகூர் காமராஜ்.

2015-ஆம் ஆண்டு மார்ச் 7-ஆம் தேதி அவர் மறைந்தபோது, தஞ்சை மாவட்டக் கழகமே திரண்டு வந்தது. கழக நிகழ்ச்சிகளுக்கு திருவாரூர் சென்றிருந்த இன்றைய கழகத் தலைவர் அவர்கள், தஞ்சாவூர் சென்று இறுதி மரியாதை செய்தார். தஞ்சைக் கழகத்தினர் ஒவ்வோர் ஆண்டும் துறவி இளங்கோவன் நினைவுகளைப் போற்றுகின்றனர். அவர் அனைத்தையும் துறந்த துறவியல்ல; கொள்கைக் குடும்பத்தை வளர்த்த தஞ்சைத் தளகர்த்தராக என்றென்றும் திகழ்வார்.

...துடிக்கும்

## இது தமிழ்நாட்டுக்கும் என்.டி.ஏ.வுக்குமான போட்டிதான்!

திருச்சியில் நடைபெற்ற கழகத்தின் 12-வது மாநில மாநாட்டில், "அ.தி.மு.க.வை முதல்வர் பதவி நப்பாசைக்காக டெல்லியிடம் அடகு வைத்துவிட்டார் எடப்பாடி பழனிசாமி. இதை அக்கட்சியின் தொண்டர்களே விரும்பவில்லை. அவர்களைப் பார்த்தால் நமக்கே பரிதாபம் ஏற்படுகிறது" என முதலமைச்சர் பேசியிருந்தார். இதையொட்டி, ஊடகங்களிலும் அ.தி.மு.க. இன்றைய நிலை குறித்து விவாதங்கள் எழுந்துள்ளன. அ.தி.மு.க.வைப் பார்த்து தி.மு.க.வுக்கு என்ன பரிதாபம் எனச் சிலர் கேட்கிறார்கள். அவர்களுக்குச் சில கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு தி.மு.க.தான் தலைமை வகிக்கிறது. கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும் இதை மறுத்துப் பேசவோ, மாற்றுக்கருத்து சொல்லவோ இல்லை. ஆனால் பா.ஜ.க.வோ, தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு நாங்கள்தான் தலைமை என்கிறது. அ.தி.மு.க.வோ, நாங்கள்தான் தலைமை என அழுத்தமாகக்கூட சொல்ல முடியாமல் மென்று விழுங்குகிறது

தி.மு.க. தனது கூட்டணிக் கட்சிகள் உடனான பேச்சுவார்த்தையைக் கழகத் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் நடத்துகிறது. ஆனால், எடப்பாடியை ஓரமாக வைத்துக்கொண்டுதான் கூட்டணியையே அறிவித்தார் அமித் ஷா. கூட்டணிக் கட்சிகள் பேச்சுவார்த்தையும் அவ்வை சண்முகம் சாலையில் உள்ள அ.தி.மு.க. அலுவலகத்தில் நடைபெறவில்லை. மாறாக, நட்சத்திர விடுதியில்தான் நடக்கிறது. பத்தோடு பதினொன்றாக எங்கோ அமர்ந்திருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. மைய நாயகமாக அமர்ந்திருப்பதோ பா.ஜ.க. புள்ளிகள்.

பிரதமர் பங்கேற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கூட்டங்களில், மதுரையில் பெரியார் படத்தை அகற்றவைத்தனர்; திருச்சியிலோ, முகப்பில் எடப்பாடி படமே இல்லாமல் செய்துவிட்டனர். மதுராந்தகம், மதுரை, திருச்சி என மூன்று பிரச்சார கூட்டங்களிலும் அ.தி.மு.க. என்றோ, எடப்பாடி பழனிசாமிதான் முதல்வர் வேட்பாளர் என்றோ ஒற்றை வார்த்தையைக்கூட உதிர்க்கவில்லை மோடி. ஒட்டுமொத்தத்தில், "இந்தத் தேர்தல் தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையிலான போட்டி அல்ல, தமிழ்நாட்டுக்கும் என்.டி.ஏ.வுக்குமான போட்டி" என்று கழகத் தலைவர் கூறுவதை மெய்ப்பிக்கிறார் மோடி. அழிவின் விளிம்பில் அ.தி.மு.க. நிற்கிறது என்பதை உணர்ந்து, இனியாவது விழித்துக் கொள்ளட்டும்' என சமூக வலைதளங்களில் கருத்துகள் பகிரப்படுகின்றன.

## ஃப்ளாஷ்பேக்



### அன்பகத்தில் தலைவருடன்!



ராம்குமார்

1992 காலகட்டத்தில் பழைய அன்பகம் கட்டடத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியின்போது, கழகப் பணிகளில் சிறப்புடன் செயல்பட்டதற்கு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய நம் முதலமைச்சர் அவர்கள், எங்களுக்கு பொன்னாடை அணிவித்துப் பாராட்டினார். என்னுடன் ரவி, பழனி, மறைந்த பாபு, கணேசன் மற்றும் முனுசாமி ஆகியோர் உள்ளனர்.

-ராம்குமார், டாக்டர் தாமஸ் சாலை, தியாகராய நகர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நினைவுகள் — சட்டப்பேரவை அலுவலகம்!

1985-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் தேதி, ஓமந்தூரார் சட்டப்பேரவை வளாகத்தில் செயல்பட்டு வந்த, கழக சட்டப்பேரவை அலுவலகத்தைக் காலி செய்து வெளியேறுமாறு சட்டப்பேரவைச் செயலாளர் கடிதம் எழுதினார். 'ஜனநாயகத்துக்கு எதிரான நடவடிக்கையை ஏற்க முடியாது' எனக் கழகம் பதிலளித்தது. மே 31-ஆம் தேதி, கழக சட்டப்பேரவை அலுவலகத்தைக் காவலர்களின் துணையுடன் காலி செய்தது அன்றைய அரசு. தர்ணாவில் ஈடுபட்ட கலைஞர், பேராசிரியர் உள்ளிட்ட முன்னணியினர் கைது செய்யப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131